www.tamilarangam.net



# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## திரைமறைவில் பிரேமதாசா அரசு மேற்கொண்ட நகர்வுகள்

"பிரேமதாசா புலிகளிடம் ஏமாந்து விட்டார். புலிகளுக்கு ஆயுதங்களை அள்ளிக் கொடுத்தார். இறுதியில் பிரபாகரன் அவரை ஏமாற்றிவிட்டார்."

மேற்கண்டவாறுதான் பிரேமதாசாவின் அரசியல் எதிரிகள் கூறிவருகின்றனர். இப்போதுகூட பொதுஜன முன்னணியினர் கூறுவதும் அதுதான்.

பிரேமதாசா பிரபாகரனை ஏமாற்றப் பார்த்தார் என்று கூறினால், பிரேமதாசாவுக்கு சிங்கள மக்களிடம் கெட்டிக்காரப் பட்டம் கிடைத்துவிடுமல்லவா.



அதுதான் பிரேமதாசா ஏமாந்து விட்டார் என்று கூறத் தலைப்பட்டனர்.

ஆனால் உண்மை அதுவல்ல. பிரேமதாசா லேசுப்பட்ட ஆளல்ல.

இந்தியப் படையை வெளியேற்றுவது என்பது ஒரு பொதுநோக்கமாக இருந்த போது புலிகள் கேட்பதை கொடுக்கத் தான் வேண்டும். கொடுத்தார்.

புலிகளால் பெற முடிந்த ஆயுதங்களையே பிரேமதாசா அரசாங்கம் கொடுத்தது.

விமானங்களை சுட்டு வீழ்த்தும் ஆயுதங்களையோ, கனரக ஆயுத தளபாடங்களையோ தூக்கிக் கொடுத்துவிட வில்லை.

கெரில்லாப் போரில் பயன்படுத்தத்தக்க விதமான ஆயுதங்களே வழங்கப்பட்டன.

புலிகளுடன் பிரச்சனை தோன்றிய பின்னர் அதே ரக ஆயுதங்கள் ஈ.பி.டி.பி, ரெலோ, புளொட் போன்ற இயக்கங்களுக்கும் வழங்கப்பட்டன. அவை பற்றிய விபரங்களை பின்னர் பார்க்கத்தான் போகிறோம்.

பிரேமதாசாவும் பிரபாகரன் தமிழீழத்தை கைவிட்டு விடுவார் என்பதை நம்பவில்லை.

பிரேமதாசா உரிமைகளைத் தருவார் என்பதை பிரபாகரனும் நம்பவில்லை.

இந்தியப்படைத்தலையீடு என்ற பொது எதிரிக்கு எதிராகவே அரசும், புலிகளும் தங்கள் சந்தேகங்களை ஓரத்தில் வைத்துக் கொண்டு இணைந்து செயற்பட்டனர்.

### இரகசிய ஏற்பாடுகள்

பிரேமதாசா மிகத் தந்திர மாக காய்களை நகர்த்த ஆரம்பித்தார்.

இந்தியப் படை வெளியேறிய பின்னர் புலிகளுடன் போர் மூண்டால் வெற்றி பெறத்தக்க இரகசிய ஏற்பாடுகள் திரை மறைவில் நடந்தன.

வவுனியாவில் இருந்த டென்சில் கொப்பேக்கடுவாவை வடபகுதிக்கான இராணுவ இணைப்பதிகாரியாக நியமித்தார் பிரேமதாசா.

டென்சில் கொப்பேக்கடுவ சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடனும் தொடர்பு உடையவர் என்று கருதியோ என்னவோ அவரை பிரேமதாசாவுக்கு பிடிப்பதில்லை.

பிரேமதாசாவிடம் ஓர் குணம் இருந்தது. திறமைசாலிகளை தட்டிக்கொடுத்து வேலை வாங்கும் குணம்.

எந்தக் காரியத்தை எவர் மூலம் முடிக்கலாம் என்பதை அறிந்து அவரவரிடம் ஒப்படைக்கத் தெரிந்தவர்களே சிறந்த நிர்வாகிகளாகவும், தலைவர்களாகவும் விளங்க முடியும்.

பிரேமதாசா சிறந்த நிர்வாகி. சிறந்த மதியூகி.

புலிகளுடன் போர் மூண்டால் வடக்கே புலிகளை எதிர்கொள்ளக் கூடிய தளபதி டென்சில் கொப்பேக்கடுவதான் என்பது பிரேமதாசாவுக்கு தெரியும்.

அதன் காரணமாக தனக்குப் பிடிக்காத டென்சிலிடம் வடபகுதிக்கான இணைப்பதிகாரி பொறுப்பை ஒப்படைக்க பிரேமதாசா முன்வந்தார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக ரஞ்சன் விஜயரத்ன பதவிவகித்தார். டென்சிலுடன் ரஞ்சன்தான் பெரும்பாலும் தொடர்புகளை வைத்திருந்தார்.

புலிகளுடன் போரை நடத்த வசதியாக பிரேமதாசா அரசு செய்த மற்றொரு பாரிய ஏற்பாடுதான் அநுராதபுரத்தில் இராணுவத்தளம்.

அநுராதபுரம் இராணுவ முகாமை விஸ்தரித்து, அதனை வடபகுதி யுத்தத்துக்கான வழிநடத்தும் தளமாக மாற்றும் காரியங்கள் துரித கதியில் நடந்தன.

அதற்கு முன்னர் அநுராதபுரம் இரா ணுவ தளத்தில் விமானங்கள் தரையிறங்க முடியாது. ஹெலிக்கொப்டர்கள் மட்டுமே சென்று இறங்க முடியும்.

சகல விதமான போர் நடவடிக்கைக் கும் ஏற்றவிதமாக அநுராதபுரம் இராணுவ தளம் மாற்றப்பட்டது.

இந்த இடத்தில் பிரேமதாசாவின் தந்திரத்தையும் பார்க்க வேண்டும்.

வவுனியா இராணுவத்தளத்தையே மேலும் விஸ்தரித்து, வடபகுதி போர் நடவடிக்கைகளை வழிநடத்தும் தளமாக அதனை மாற்றியிருக்கலாம்.

அவ்வாறு செய்திருந்தால் புலிகளுக்கு தெரியவரும். போருக்கான தயாரிப்பில் அரசு ஈடுபடுவதாகக் கண்டு புலிகள் முந்திக் கொள்வார்கள் என்பது ஒரு காரணம்.

வவுனியா தமிழ்ப் பிரதேசம் என்ப தால் அங்கு இருப்பதைவிட சிங்களப் பிரதேசம் ஒன்றில் வழிநடத்தும் தளம் இருப்பதே நீண்டகால நோக்கில் பாதுகாப் பானது என்பது இன்னொரு காரணம்.

மேற்கண்ட தனது தந்திரங்கள் யாருக்குத் தெரியவராது எனப் பிரேமதாசா அரசு நினைத்ததோ, அவர்களுக்குத் தெரியாமல் இல்லை.

பிரேமதாசா தயாராகிக் கொண்டிருக்கிறார். சரியான தருணத்தில் போரை ஆரம்பித்து நாம் முந்திக் கொள்ளவேண்டும் என்று தீர்மானித்து புலிகளும் தயாராகிக் கொண்டிருந்தனர்.

### ஜிகாத்தும் பொலிஸ் சேவையும்

பிரேமதாசா அரசு மேற்கொண்ட மற்றொரு நடவடிக்கை கிழக்கில் உள்ள புலிகளை உசுப்பிவிட்டது.

முஸ்லிம் தீவிரவாத அமைப்பான ஜிகாத்தில் பயிற்சி பெற்றவர்கள் பொலிஸ் படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டு நிரந்தரமாக்கப்பட்டனர்.

ஜிகாத் அமைப்பின் நடவடிக்கை தொடர்பாக கிழக்கில் தமிழர்களிடம் மட்டுமல்லாமல், முஸ்லிம் மக்களிடம்கூட அதிருப்திகள் நிலவின.

தமிழ், முஸ்லிம் உறவைக் குலைத்து, கிழக்கில் சமூக மோதலைத் தோற்றுவிக்க அரசால் ஊக்குவிக்கப்பட்டதே ஜிகாத் அமைப்பாகும்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பில் இருந்து பின்னர் அரசின் தேசிய புலனாய்வுப் பிரிவு உளவாளியாக மாறியவர் மவுசூக். இவரை உளவுப் பிரிவில் இணைத்தவர் எஸ்.பி. மஜீத். (தற்போது பொலிஸ் சேவையில் இருந்து விலகி யூ.என்.பி. அமைப்பாளராக இருக்கிறார்)

மவுசூக் மட்டுமன்றி ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பில் பயிற்சி பெற்ற இன்னொரு முஸ்லிம் இளைஞரும் ஜிகாத்தில் முக்கிய பாத்திரம் வகித்தார்.

ஜிகாத் இயக்கத்தினரை பொலிஸ் சேவையில் சேர்ப்பது கிழக்கில் தமிழ்-முஸ்லிம் உறவுகளை சீர்குலைப்பதற்கும், மோதல் களைத் தூண்டுவதற்குமான சதியே என்று புலிகள் ஆட்சேபம் தெரிவித்தனர்.

### தலைமையகம்

இதற்கிடையே இராணுவ நடவடிக்கைக்கான தலைமைச் செயலகம் என்னும் புதிய கட்டமைப்பை முதன் முதலில் உருவாக்கியது பிரேமதாசா அரசு.

போரை ஒழுங்கமைத்து நடத்தவே அந்த ஏற்பாடு.

'இனியும் பொறுத்தால் அரசு முந்திக் கொள்ளும்' என்று பிரபாகரன் போருக்குத் தயாரானார்.

பிரபாகரன் வழக்கமாகக் கூறும் வார்த்தைகளையே அக் கட்டத்திலும் கூறினார்:

"துப்பாக்கி வைத்திருப்பவர்களில் எவன் முந்துகிறானோ அவனுக்கே வெற்றி கிட்டும். எதிரி எங்களைத் தேடி வருவதற்கு முன்னர் நாம் அவனைத் தேடிச் செல்ல வேண்டும்!"

புலிகளுடன் பேச்சை மேலும் சிலகாலம் நீடித்து, போதிய தயாரிப்புக்களை செய்து முடித்துவிடலாம் என்றே பிரேமதாசா கருதினார்.

போர் தொடங்கும்போது புலிகளை ஒரே அடியில் வீழ்த்திவிடக்கூடிய பலத்தை திரட்டவே அவருக்கு அவகாசம் தேவைப் பட்டது.

வடக்கு-கிழக்கில் படையினருடன் புலிகளுக்கு முறுகல் நிலை ஏற்படாமல் பார்த்துக்கொள்ள பிரேமதாசா பல உத்தரவுகளை பிறப்பித்தார்.

வவுனியாவில் மோதல் ஏற்பட இருந்த சமயத்தில் இராணுவத்தினரை முகாமுக்கு உடன் திரும்புமாறு பணித்தார்.

இவையெல்லாம் புலிகளுக்கு விட்டுக் கொடுத்தது போலவே வெளிப்பார்வைக்கு தெரிந்தன.

உண்மையில் இந்த விட்டுக் கொடுப்புக்கள் யாவும், திரைமறைவில் நடந்த தயார்படுத்தல்கள் மத்தியில்தான் நடந்தேறின.

ஆயினும் புலிகள் ஏமாறவில்லை. 'சிங்கள அரசுகள் உரிமைகளை தாமாக வழங்கப் போவதில்லை' என்னும் வரலாற்று அனுபவம் பிரபாகரனுக்கு கைகொடுத்தது.

'சரியான தருணம் ஒன்றில் அடி கொடுக்கப் போகிறேன்' என்று அரசுடன் பேச்சு நடத்திய தமது பிரதிநிதிகளுக்கும் பிரபாகரன் கூறிவிட்டார்.

### பாலகுமார் பேச்சு

இக் கட்டத்தில் ஈரோஸ் அமைப்பின் போக்குத் தொடர்பாக புலிகள் கோபம் கொண்டிருந்தனர்.

புலிகளுடன் நல்லுறவை ஏற்படுத்த பாலகுமார் விரும்பினார். பிரபாகரனை சந்தித்து பேச்சு நடத்தினார்.

அதன்பின்னர்தான் 'சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ள மாட்டோம்' என்ற முடிவை ஈரோஸ் வெளியிட்டது.

போர் தொடங்குமானால் பாராளுமன்றத்தை விட்டு ஈரோஸ் வெளியேறவும் தயாராக இருக்கிறது என்றும் பிரபாகரனிடம் உத்தரவாதம் கொடுத்திருந்தார் பாலகுமார்.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டசந்தர்ப்பங்களில் நீதியமைச்சர் ஏ.சி.எச்.ஹமீட்தான் புலிகளுடன் தொடர்பு கொண்டு தணிக்க முயலுவார்.

கொழும்பில் ஈரோஸ் அலுவலகத்தில் இருந்த தகவல் தொடர்பு சாதனம் ஊடாகவும் அமைச்சர் ஹமீட் புலிகளுடன் தொடர்பு கொண்டு பேசுவதுண்டு.

### பொறி

அரசை முந்திக்கொள்ள வேண்டும் என்று தயாரான புலிகளுக்கு போரைத் தொடங்க ஒரு பொறியாக அமைந்தது மட்டக்களப்பில் நடைபெற்ற சம்பவம் ஒன்று.

சிங்கள வியாபாரி ஒருவரால் தாக்கப்பட்ட முஸ்லிம் வியாபாரி ஒருவர் மட்டக் களப்பு பொலிசில் சென்று முறையிட்டார்.

## மட்டக்களப்பில் ஆரம்பமான இரண்டாம் கட்ட ஈழப்போர்




புலிகள் வெளியிட்ட காட்டூன்

அந்த முறைப்பாட்டை ஏற்க மறுத்த சிங்களப் பொலிசார் முஸ்லிம் வியாபாரியை விரட்டி விட்டனர்.

அந்த முஸ்லிம் வியாபாரி புலிகளிடம் சென்று முறையிட்டார்.

'அப்படியா சங்கதி' என்று கேட்டுவிட்டு, மட்டக்களப்பு தளபதி கருணாவிடம் புலிகள் தெரிவித்தனர்.

அந்த சிங்கள வியாபாரியைப் பிடித்து விசாரிக்குமாறு கருணா கூற, வியாபாரியை பிடிக்கப் போனார்கள். அந்த வியாபாரி பயத்தில் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திற்கு சென்று விட்டார்.

அந்த வியாபாரியை ஒப்படைக்குமாறு புலிகள் கேட்க, பொலிஸார் முதலில் பயந்து ஒப்புக்கொண்டனர்.

பின்னர் புலிகளை எதிர்க்க முற்பட்டனர். உடனடியாக தாக்குதல் கொடுத்த புலிகள் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தனர்.

அதேசமயம் வோக்கியில் தகவல்கள் பறக்க, மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பல பொலிஸ் நிலையங்களை துரித கதியில் முற்றுகையிட்டனர் புலிகள். அவையும் புலி களின் கட்டுப்பாட்டில் சென்றன.

### மோதல்

கஞவாஞ்சிக்குடிப் பொலிஸ் நிலையத்துக்குள் இராணுவத்தினரும் முகாம் அமைத்திருந்தனர்.

அதனால் புலிகள் முற்றுகை இட்டதும் சண்டை மூண்டது. அங்கிருந்து கல்முனை வாடி வீட்டில் இருந்த இராணுவத்திடம் உதவி கோரினர்.

கல்முனை வாடி வீட்டில் இருந்து புறப்பட்ட இராணுவம் கடற்கரை வீதி வழியாகப் புறப்பட்டு நகருக்குள் புக எத்தனித்தது.

முன்னேறிய இராணுவத்தை தடுத்து நிறுத்த புலிகள் தாக்குதல் தொடுத்தனர்.

சண்டை தீவிரமானது. கொழும்புக்கு தகவல் பறந்தது.

கொழும்பில் இருந்து ஹெலிகளும் குண்டுவீச்சு விமானங்களும் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்கள் நோக்கி விரைந்து சென்றன.

பொறுத்த அடி ஒன்றை கொடுத்து விட்டு, பின்னர் வேண்டுமானால் யுத்த நிறுத்தம், செய்யலாம் என்று அரசாங்கம் திட்டமிட்டது.

அதனால்தான் குண்டுவீச்சு விமானங் கள் செல்ல அனுமதி கொடுக்கப்பட்டது.

கடற்படைப் படகுகளும் விரைந்து சென்றன.

இதற்கிடையே பொலிஸ் நிலையங்களில் இருந்த பொலிசாரை புலிகள் கைதுசெய்து கொண்டு சென்றனர்.

நீதியமைச்சர் ஹமீட் கொழும்பில் இருந்தபடி புலிகளுடன் தொடர்பு கொள்ள முயன்றார்.

அதற்காக ஈரோஸ் அலுவலகத்தில் இருந்த தகவல் தொடர்பு சாதனம் ஹமீட் வீட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு பொருத்தப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இருந்த யோகி, மாத்தையா ஆகியோருடன் ஹமீட் பேசினார்.

மறுமுனையில் இருந்து அவர்கள் கூறினார்கள்:

"எப்படி ராஜீவ் காந்தி எங்களை



நம்பவைத்து முதுகில் குத்தினாரோ, அப்படி பிரேமதாசாவும் எங்கள் முதுகில் குத்திவிட்டார் என்று தலைவர் கூறுகிறார். எனவே உங்களை நம்ப நாங்கள் தயாராக இல்லை!"

சண்டை தொடங்குவதற்கும், அரசு மீது தங்களுக்கு சந்தேகம் ஏற்படவும் காரணமான விடயங்களை மறுமுனையில் இருந்து புலிகள் பட்டியலிட்டனர்.

அநுராதபுரத்தளம் விரிவாக்கப்பட்டமை, நடவடிக்கை தலைமைச் செயலகம் உருவாக்கப்பட்டமை, ஜிகாத் உறுப்பினர்களுக்கு பொலிஸ் உத்தியோகம் அளிக்கப்பட்டமை போன்றவையே புலிகளது பட்டியலில் முக்கியம் இடம்பெற்றிருந்தன.

சண்டையை நிறுத்துவது என்றால் அதற்கு பல்வேறு முன்நிபந்தனைகளையும் புலிகள் விதித்தனர்.

ஒரு கட்டத்தின் பின்னர் தலைவர் விரும்பவில்லை என்று கூறி அமைச்சர் ஹமீட்டுடன் தகவல் தொடர்பு சாதனம் ஊடாகப் பேசுவதையும் புலிகள் தவிர்த்தனர்.

### ஹமீட் பயணம்

யோகி, மாத்தையா ஆகியோரை கொழும்பு வருமாறும், பேசித் தீர்க்கலாம் என்றும் ஹமீட் வேண்டுகோள் விடுத்தார். கெஞ்சும் தொனியில் கோரினார்.

'முடியாது!' என்று வந்தது ஒரே பதில்.

நேரில் சென்று பேச ஹமீட் புறப்பட்டார்.

அவர் பலாலி விமானத் தளத்தில் சென்று இறங்கும்போது நிலமை கட்டுமீறிக் கொண்டிருந்தது.

புலிகள் பலாலித்தளம் நோக்கி ஏவிய ஷெல் ஒன்று ஹமீட் அங்கு இறங்க முன்னர்தான் விழுந்து வெடித்திருந்தது.

பிரேமதாசா, ரஞ்சன் ஆகியோர் படைத்தரப்புடன் இணைந்து மேற்கொண்ட திரைமறைவு வேலைகள் அமைச்சர் ஹமீட்டுக்கு பூரணமாகத் தெரிந்திருக்கவில்லை.

அதனால் புலிகள் வேண்டுமென்றே கூறுகிறார்களோ? என்றுகூட அவர் சந்தேகப்பட்டார்.

அமைச்சர் ஹமீட்டை அனுப்பி தம்மை ஆழம் பார்க்கிறார் பிரேமதாசா என்று கருதினர் புலிகள். ஆகவே பிடிகொடாமல் நடந்துகொண்டனர்.

தோல்வியோடு திரும்பினார் ஹமீட்.

இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமாகிவிட்டது.

ஈரோஸ் பா.உக்கள் உடனடியாக பாராளுமன்றத்தைவிட்டு வெளிநடப்புச் செய்தனர்.

பிரேமதாசா அரசுடன் இனிப் பேச்சுக்கே இடமில்லை என்று முடிவு செய்துவிட்டார் பிரபாகரன்.

(தொடர்ந்து வரும்)

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்